Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (06 - 03 - 1991) புதன்கிழமை ஓசை 16

## சந்தேகத்தின் பேரில் கொழும்பில் 200 பேர் கைது


(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொல்லப்பட்டது தொடர்பாக இதுவரை 200 பேர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இவரின் மரணத்தின் சூத்திரதாரர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதிலேயே பொலிஸ் பகுதி தீவிரமாக ஈடுபட்டுள்ளதுஎன்றும்அந்தவட்டாரங்கள்தெரிவித்தன.



கொல்லப்பட்ட அமைச்சர் ரஞ்சன் பயணம் செய்த கார் குண்டு வெடிப்பில் சிக்கி உருக்குலைந்த நிலையில்.

அமைச்சர் ரஞ்சன் கொல்லப்பட்ட குண்டு வெடிப்பு நிகழ்ந்த பகுதியில் சிறிலங்கா பொலிஸார் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.



# 2-வது நாளாக குண்டுவீச்சு

(நமது நிருபர்)

யாழ்: குடாநாட்டில் இரண்டாவது நாளாக நேற்றும் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பரவலான குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது. இத் தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்; கால்நடைகளும் கொல்லப்பட்டன. பல வீடுகளும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை ஆரம்பித்த இவ் விமானத் தாக்குதலில் இரு விமானங்கள் ஈடுபட்டன. இத் தாக்குதல் கொக்குவில் கலட்டி நல்லூர், கோம்பையன் மணல், அச்சுவேலி, தோண்டாவில், நெல்லியடி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இத் தாக்குதலைத் தொடர்ந்து அநேக பாடசாலைகள் மூடப்பெட்டன.

## க. பொ. த. உயர்தர பரீட்சை

## வடக்கு - கிழக்கில் நடக்குமென கொழும்பு பத்திரிகை தகவல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கைச் சேர்ந்த மாணவர்களுக்கென நடைபெறும் விசேட க. பொ. த. உயர்தரப் பரீட்சை வரும் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி முதல் மே மாதம் 15ஆம் திகதி வரை வடக்குக் கிழக்குப் பகுதிகளிலேயே நடைபெறும் என கடந்த மூன்றாம் திகதி 'வீரகேசரி'யில் குறிப்பிடப் பட்டுள்ளது.

கொழும்பு, புத்தளம், அநு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம்பகுதியில்நேற்று பூரண ஹர்த்தால்

(சுன்னாகம்)

சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் சுன்னாகம் பகுதியில் நேற்றுமுன் தினம் மேற்கொண்ட மூர்க்கத்தனமான தாக்குதலில் மரணமான ஐந்து பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்தி நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதியில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது. சந்தை கூடவில்லை. மக்கள் நடமாட்டம் குறைந்து வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. வர்த்தக நிலையங்கள் முன் சிவப்பு, மஞ்சள் நிற கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தது. (ச)

## வீரவணக்கம்

### மலையான்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து விடுதலைப்புலிகளின் காவல் அரண்கள் மீது தாக்குதல் நடத்தியபடி வெளியேற முற்பட்ட இராணுவத்துடன் நேருக்குநேர் மோதி மலையான் என்ற போராளி வீரமரணமடைந்தார்.

கடந்த 3ஆம் திகதி நடந்த சம்பவத்தில் தேவநாயகம்அன்ரனி என்ற காங்கேசன்துறையைச் சேர்ந்த இந்தப் போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## குடியிருப்பு மீது குண்டு வீச்சு வயோதிப மாது பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்: கோம்பையன்மணல் மயானத்தின் முன் உள்ள குடியிருப்புக்கள்மீது சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை எட்டு மணியளவில் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

மா. சின்னம்மா (வயது 67) என்பவரே கொல்லப்பட்டவர். மேலும் எஸ் கனகேஸ்வரி (வயது 54), மதிவதனி (வயது 13), ராசா (வயது 18), எம். கங்காலட்சுமி (வயது 40), ஆனந்தி (வயது 16), மனோகரன் (வயது 13), ஆர். சண்முகேஸ்வரன் (வயது 29), குமாரி (வயது 23) ஆகியோர் படுகாயமடைந்தனர். இந்தப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் மூதாட்டி பலி

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்கள் நல்லூர்ப் பகுதியில் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வயோதிபப் பெண் ஒருவர் பலியாகி உள்ளார். மூன்று வீடுகளும், ஒரு கடையும் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 10 40 மணியளவில் நல்லூர், கோயில் வீதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின்போது குண்டொன்று வீதியில் வீழ்ந்து வெடித்ததால், பதுங்கு குழிக்குள் புகுவதற்காக ஓடிச் சென்ற நல்லூரைச் சேர்ந்த க. இராசம்மா (70) என்பவர் கொல்லப்பட்டார்.

(மு) (85) (செ. த. மை)

## கலட்டிச் சந்தியில் ஒருவர் பலி; இருவர் காயம், வீடுகள் சேதம்


(யாழ்ப்பாணம்)

கலட்டிச் சந்தியில் உள்ள குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப் படையினர் குண்டுவீசித் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் ஒரு தடவை குண்டுவீசி தாக்கிய போது தம்பிராசா (வயது 55) என்பவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

எஸ். ராசாப்பு (வயது 43),

(4ஆம் பக்கம் பார்க்க)



அமைச்சர் ரஞ்சனுக்கு பாதுகாவலர்களான விசேட அதிரடிப் படையினர் பயணம் செய்த ஜீப் வண்டியின் சிதைந்த தோற்றம்.

## ஊர்காவற்றுறையில் மோதல்

(மூளாய்)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் சின்ன மூளாய், சுருவில், கரம்பொன் ஆகிய பகுதிகளூடாக வெளியேற முயன்றபோது விடுதலைப்புலிகள் வழிமறித்துத்தாக்கினர். ஒரு இராணுவம் காலை இழந்தது. மேலும் பலத்த சேதத்துடன் இராணுவம் முகாம் திரும்பியது.

நேற்றுமுன்தினம் காலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

**சுத்தமான**
**வேப்பெண்ணெய்**

வீட்டில் ஒளி பெற நுளம்பினை விரட்ட மருத்துவ தேவைக்கு சுத்தமான வேப்பெண்ணெய் ப.நோ.கூ சங்கங்களிலும் கடைகளிலும் விற்பனையாகிறது மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(B-2098)

**நியு வெஸ்ரோன் எலக்ரோனிக் கோப்**

ரீ.வி. டெக். றேடியோ, மணிக்கூடு. நிலவண்டிக் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும். புதிய பழைய பாடல்களும் புரட்சிப்பாடல்கள் பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி. ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(B-2102)


**நன்றிகள்**

என்னால் தவறவிடப்பட்ட காசுப்பையைக் கண்டெடுத்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்த நாதன் அவர்களுக்கும், என்னிடம் ஒப்படைத்து உதவிய பிரச்சாரப் பிரிவுப் பொறுப்பாளருக்கும் எனது நன்றிகள்.
ஆதிலட்சுமி இராசையா.

(R-1151)

## பெற்றுக் கொள்ளவும்

★ யாழ். இந்துக் கல்லூரி சிரேஷ்ட மாணவர்களான மை. மகாதாசன், க. சுதமன் ஆகியோரால் அம்மன் வீதி, பலாலிச் சந்தியில் 1420 ரூபா கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

★ வெலிங்டன் தியேட்டர் சந்தியில் நேற்று இ. நாகலிங்கம் என்பவரால் நூறு ரூபா கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் கூறிப் பெற்றுக்கொள்ளவும்.

★ இதே வேளை இன்னுமொரு கைப்பையும் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சறுப்பு நிறமான இந்தக் கைப்பையினுள் இணுவில் சாந்தினி என்ற யுவதியின் அடையாள அட்டையும் காணப்படுகிறது

**உலகின்**

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளைக் கொண்ட பல் நாட்டு படைகளை இணைத்து யுத்த முறையில் வழி நடத்துவதற்கு ஒரு திறமை வேண்டும் அதற்கான ஆளுமை நோர்மன் சுவாஸ்கொவ்விடம் இருந்தது.

240 கிலோ மீற்றர் (150 மைல்கள்) எந்த வித இழப்பும் இன்றி ஈராக்கிற்குள் பல் நாட்டுப் படைகளை வழி நடத்தினார். இத்தனை சாகசங்களையும் றியாட்டில் சாளரம் இல்லாத பதுங்கு குழியில் தங்கியிருந்தே நோர்மன் சுவாஸ்கொவ் செய்துள்ளார்.

வளைகுடாப்போரின் பின்னர் சண்டே ரைம்ஸில் வெளிவந்த கட்டுரையில் இருந்து ஒருபகுதி தரப்படுகின்றது.

இந்தக் கருத்து ஈழநாதத்தின் உடையதல்ல

ஆ-ர்

**பங்குனி எட்டு**

# பெண்களின் எழுச்சி நாள்

கடந்த எண்பது வருடங்களாக பங்குனி எட்டாம் திகதி அடக்கப்படும் பெண்ணினத்தின் உரிமைக் குரலை உயர்த்திச் சொல்லும் எழுச்சிமிகு நாளாக உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. எமது நாட்டில் அண்மைக் காலங்களில்தான் இத்தினத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அந்த வகையில் காலாதி காலமாக ஆணாதிக்க சமூகத்தின் அடக்குமுறைக்குள் அகப்பட்டு அல்லலுற்றுக் கொண்டிருப்பது மட்டும் அல்லாது இனவாத அரசின் இரும்புப் பிடிக்குள்ளும் இடர்பட்டு, வதைபட்டுக் கொண்டிருக்கும் தமிழீழப் பெண்களின் எழுச்சியைக்காட்டும் நாளாக எதிர்வரும் பங்குனி எட்டாம் திகதி கொண்டாடப்பட இருக்கின்றது.

மூடக்கொள்கைகள் எமது பெண்களை மூச்சுத்திணற வைத்துக் கொண்டிருக்கின்றன. சீதனம் இல்லையென்றால் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம் எனச் சபிக்கப்பட்டு சாகும்வரை வேதனையுடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள், எமது பெண்கள் சாதிக் கொடுமையினாலும்தான் சாகடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். கல்வி பெண்களுக்கு அத்தியாவசியம் என்பதைக்கூட அறியமுடியாத நிலையில் இன்று பல பெண்கள் மூடக் கொள்கைகளாலும் அர்த்தமற்ற மதக்கோட்பாடுகளாலும், வேலைச்சுமைகளாலும் அமுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றால் மட்டுமல்லாமல் இன்னும்பல சமூகக் கொடுமைகளுக்குள்ளாகி அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள் இவர்கள்.

இத்தனையும் போதாது என்று இனவாத அரசின் அட்டூழியங்களால் அல்லல்வாழ்வு வாழும் பெண்கள், எண்ணில்லாதோர். அரச இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு படுத்தப்பட்டு வாழும் பெண்கள் திசை தெரியாக் காட்டில் மறைந்தேனும், தம்மைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்று நினைக்கும் முன்பே அவர்களை இழுத்துச் சென்று தம் காமப்பசியைத் தீர்த்துவிட்டு தடயமின்றியே அழித்துவிடுகிறார்கள். சிங்கள இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல்படையினரும், சிங்கள முஸ்லிம் காடையர்களால் கணவனும் பிள்ளைகளும் சித்திரவதைப்பட்டுக் கொல்லப்படுவதைத் தம் கண்ணால் கண்டு மனம் பேதலித்துவிட்டதென் தமிழீழப் பெண்களின் சோகங்கள் சொல்லும் தரமன்று.

இத்தனை கொடுமைகள் மட்டும்தான் எமது தமிழீழத்துப் பெண்கள் அனுபவிப்பவை அல்ல. எண்ணிலா ஒடுக்குமுறைக்குள் அகப்பட்டு, அலைபட்டு, அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் எமது தமிழீழப் பெண்கள், பெண்ணினம் என்பதால் மட்டுமல்ல தமிழினப் பெண்கள் என்பதாலும், இன சமூக ஒடுக்குமுறை வடிவங்கள் அனைத்தாலும் தாங்கொணாக் கொடுமைகளைத் தினம்தினம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தாயக மீட்புக்காகவும், பெண்ணினத்தின் விடிவிற்காகவும், தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர்பிரிவு இணைந்து கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதியில் தமிழினத்தைப் பிணித்துள்ள அடிமைவிலங்கு மட்டுமல்லாமல் தமிழீழப் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் அனைத்து அடக்குமுறைகளும் உடைத்தெறியப்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகள்
மகளிர் முன்னணி

## கருத்தரங்கைத் தொடர்ந்து கலந்துரையாடல்

(நல்லூர்)

''இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள உந்தல்களும் அவற்றிற்கான தீர்வுகளும்'' என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கைத் தொடர்ந்து நாளை வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கும் இக் கலந்துரையாடலில் டாக்டர் டி. ஜே. சோமசுந்தரம் வணபிதா. செல்வரெட்ணம் ஆகியோர் ஆலோசனை வழங்குவர்.


## புதியதொழிற் பயிற்சி நெறிகள்

❋ RADIO T V. & VIDEO DECK
❋ Air condition and Refrigeration

ஆரம்பம்: 09 03-1991

★ சிறந்த துரித பயிற்சி நெறி
★ இலகு செய்முறைப் பயிற்சி

விபரங்களுக்கு:

North Ceylon
Technical Institute

14, St. Peter's Lane
Hospital Road, Jaffna.

(B-3004)

## THE JAFFNA EDUCATION CENTRE

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

O/L A/L IAB
Spoken English, Shorthand
Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன

(B/ 2106)

## கம்ப்யூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING
AND
COMPUTER PROGRAMMING IN
BASIC LANGUAGE

ஆரம்பம்: 08-03-1991 9-00 A. M.
திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்.

09 03-1991 9-00 A. M.
சனி, ஞாயிறு வகுப்புக்கள்

O/L படித்த இரு பாலாரும் சேரலாம்.

தமிழ்ப் பிரதேச மாணவர்களின் நன்மைகருதி தமிழில் விளக்கங்கள் அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். தமிழ்ப் பிரதேசத்தில் தனித்துவம்மிக்க கம்ப்யூட்டர் கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களுக்கு:



UNIKCO
COMPUTER
CENTRE
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(B.2101)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

## தொழிலாளர் கல்விப் பாடநெறி 1991

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க / அரச கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழிலில் விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/-க்கான காசுக் கட்டளையை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ × 10 செ. மீ. அளவினதான கடித மேலுறையுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 13-03-1991.

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் நேர்முகத் தேர்வு ஒன்றுக்கூடாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வு 23-03-1991 சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு: பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

— பதிவாளர்

(B.2103)

### ❋ சிந்தனைக்கு ❋

எதிலும் ஓர் ஒழுங்கு முறை நல்லது.
ஓர் ஒழுங்கு திட்டம் தான்,
உலகத்தையே ஆள்கிறது.

— ஜானத்தன் ஸ்விப்ட்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம். 06-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ. எண் 05


# திட்டமிடலின் அவசியம்

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு பருவத்தில் பற்றாக்குறை - விலை ஏற்றம் - ஒரு பருவத்தில் மேலதிகம் - விலை வீழ்ச்சி. இது உலகில் பல பாகங்களிலும், குறிப்பாக விவசாயத்தை அடிப்படைப் பொருளாதாரமாகக் கொண்ட நாடுகளில் நிகழும் பொதுவான ஒரு விடயமாகும்.

சில வாரங்களின் முன்னர் யாழ் குடா நாட்டுப் பகுதியில் சராசரியாக கிலோ முப்பது ரூபாவிற்கு மேல் விற்ற மரக்கறிகள் இன்று ஐந்து ரூபாவிற்கும், பத்து ரூபாவிற்கும் இடையில விற்பனையாகின்றன. அதேபோன்று உழுந்து போன்ற உற்பத்திப் பொருள்களும் குறிப்பிடக் கூடிய அளவில் சந்தையில் விலை போகாமல் உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பிரச்சினை, பொதுவாக விவசாய நாடுகளுடைய பிரச்சினையாக இருப்பினும், போராட்டச் சூழலில் அதுவும் பொருளாதாரத் தடைக்கு உள்ளாகியிருக்கும் தமிழ்ப்பிரதேசங்களில் இந்நிலை தொடர்வதை உடன் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பொருளாதாரத் தடையினாலும், இராணுவ நடவடிக்கையினாலும் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள். பல ஆயிரக்கணக்கான மக்கள் தொழில்களை இழந்துள்ளார்கள். இதனால் அன்றாட சீவியம் நடத்துவதே கடினமாகவுள்ளது. அதேவேளை பொருளாதாரத் தடையினால் உற்பத்தியாளர் வலுப்பொருள்கள், மூலப்பொருள்களின் பற்றாக்குறையால் பெருமளவு முதலீடு செய்ய வேண்டியுள்ளது. அதேவேளையில் விலையில் ஏற்படும் திடீர் வீழ்ச்சி விவசாயியைப் பெரிதும் பாதிக்கின்றது.

இந்நிலையில் உற்பத்தியாளரும் நட்டமடையாமல் நுகர்வோரும் நட்டமடையாமல் இருக்கக் கூடிய நிலை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதேவேளை பருவ காலங்களுக்கிடையில் ஏற்படும் விலை வேறுபாடுகளை குறைக்க முயற்சித்தல் வேண்டும். மக்கள் உள்ளூர் உற்பத்தியில் தங்கியிருக்கக் கூடிய நிலை உருவாக வேண்டும் அதற்காக உற்பத்தியாளர்கள் உற்பத்தியிலும், மக்கள் நுகர்விலும் படிப்படியான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறானதொரு நிலை உருவாக்கப்படவேண்டுமானால் எமது பிரதேசத்தன உற்பத்தி நிர்ணய நேர்த்தியான திட்டமிடல் மிகவும் அவசியமாகின்றது. முதலில் எமது மக்களின் தேவையின் அளவு உற்பத்தியின் அளவு என்பன மதிப்பிடு செய்யப்பட வேண்டும். பின்னர் பயிர் வகைகள் தெரிவு செய்யப்பட்டு என்ன என்ன அளவில் எவ்வளவு எவ்வளவு பொருள்கள் உற்பத்தி செய்யப்படல்வேண்டும் என்பது தீர்மானிக்கப்படல வேண்டும்.

மேற்கு நாடுகளின் சந்தைகளில் விவசாயப் பொருள்களின் விலையைப் பேணுவதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும் மானியங்கள் வழங்க படுவதுண்டு. அதாவது ஒரு விவசாயியின் உற்பத்தி அளவு எவ்வளவு இருத்தல் வேண்டும் எனத் திட்டமிடப்படுகின்றது. மேலதிகமான உற்பத்தி நிறுத்தப்பட்டு அதற்கு மானியம் வழங்கப்படுகின்றது.

ஆனால் இங்கு அவ்வாறு உற்பத்தியைத் தடைசெய்தல் கூடாது பாதுகாக்கவோ பதப்படுத்தவோ முடியாத பொருள்களின் உற்பத்தி அளவு நிர்ணயிக்கப்பட வேண்டும். அதேவேளை நிலப்பரப்பினதும், நீரினதும் தன்மைகளை பகுப்பாய்வு செய்யப்பட்டு அதற்கேற்குரிய பயிர் வகைகள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

மேலதிக உற்பத்திகள் தடை செய்யப்படும் போதும், மிகுதி நிலப்பரப்பில் சேமித்து வைக்கக் கூடியதும், நீண்ட நாட்களுக்குப் பதப்படுத்தி வைக்கக் கூடியதுமான உற்பத்திகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வந்த உணவுப் பழக்கம் பெருமளவு மாறிவிட்டது. இந்நிலையில். மீளவும் பழைய உணவு முறைகளுக்குப் போவது என்பதும் சாத்தியப்பாடான விடயமாக இருக்க முடியாது இந்நிலையில். இன்றைய நிலையில் இருந்து ஓரளவு மாறுபட்ட எமது உற்பத்தியுடன் தொடர்புடைய பொருள்களை நுகரக் கூடிய உணவு முறைகளுக்கும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

போராட்டச் சூழ்நிலையில் மக்கள் தமது சுய தேவையைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு உற்பத்திப் பொருளின் தெரிவு. அளவு என்பன தெளிவாகத் திட்டமிடப்படல் வேண்டும்.

விவசாயப் பொருள் உற்பத்தியாளர்களால் இதனைப் பூரணமாகச்செய்ய முடியாதத கையால் இதனை தேவை உற்பத்தித்திறன், வளம் என்பனவற்றை ஒரே நோக்கில் அவதானிக்கக் கூடியவர்களினாலேயே மேற்கொள்ள முடியும் இது தொடர்பாக விவசாயம் சார்ந்த அதிகாரிகள் பலர் உள்ளனர். பல்கலைக்கழக மட்டத்தில் புத்திஜீவிகளும் உள்ளனர். இவர்கள் இதற்கான திட்டத்தை உடன வரையவேண்டும் திட்டமிடல் சரியாக இருப்பின் உற்பத்தியாளரும் சரி. நுகர்வோரும் சரி பாதிப்படையாத நிலை ஏற்படுவதோடு, மக்களின் தேவையும் நிவர்த்தி செய்யபடும். பொருளாதாரத் தடை மூலம் எமது போராட்டத்தை நசுக்க எடுக்கப்படும் முயற்சியும் முறியடிக்கப்படும்.

# உலகின் முன்னணித் தளபதி
# ஜெனரல் நோர்மன் சுவாஸ்கோவ்

பாரசீக வளைகுடாப் போரில் பல்நாட்டுப் படைகளை வழிநடத்தியவர் அமெரிக்க ஜெனரல் எச். நோர்மன் சுவாஸ்கொவ் ''கரடி'', ''புயல் மனிதன்'' என்றெல்லாம் அழைக்கப்படும் சுவாஸ்கொவ் இரண்டாவது உலகப் போரின் பின் சிறந்த தளபதியாகவும், பெரும் வெற்றியாளராகவும் கருதப்படுகிறார்.

38 நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வான் சண்டையை 100 மணிநேர யுத்தத்துடன் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார் சுவாஸ்கோவ்.

வளைகுடாவில் 38 நாட்கள் சுவாஸ்கோவ்வைச் செய்தியாளர் அணுகி 53 வயதான சதாம் ஹுசையினைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்ட போது அவர் சாதாரணமாகச் சிரித்தாராம். உயிர் இழப்புகள் குறைவான ஒரு யுத்தத்தை நடத்துவது தான் நோர்மன் சுவாஸ்கொவ்வின் நோக்க



ஜெனரல்
ஐஸ்னோவர்

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவினதும் அதன் நேச நாட்டுப் படைகளினதும் பிரதம தளபதியாக விளங்கிய ஜெனரல டுவிட் ஐஸ்னோவர் யுத்தத்திற்குப் பின்னர் இரு தடவைகள் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.



ஜெனரல்
சுவாஸ்கோவ்

பாரசீக வளைகுடாப் போர் நடத்திய சுவாஸ்கோவ் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இடம்பெற்ற போரில் கூட்டுப்படைகளுக்கு தலைமை தாங்கினார் இவர் அமெரிக்க உப ஜனாதிபதியாக வருவதற்கு உரிய சந்தர்ப்பங்களையும் இந்தப் போர் வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மாகும். என இராணுவ விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

போரில 50 0000 பல் நாட்டுப் படைகளுக்குத் தலைமை தாங்கிய சுவாஸ்கோவ் தனது தரப்பில் 150 பேரர் வீரர்களை மாத்திரம் இழந்தார் என்று அமெரிக்க தரப்பில் மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. இது ஒரு இராணுவ சாதனை

தொடர்ச்சியாக இடம்பெற்ற வான் சண்டையை 100 மணி நேர தரையுத்தத்துடன் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தமைய சாதனை இவரையே சார்ந்ததாகும். இது உலக யுத்த வரலாற்றில் ஓர் இன்றியமையாத சாதனையாகப் போற்றப்படுகிறது.

56 வயதான நோர்மன் ''குவைத் உங்கள் நாடு. அதற்காகச் சண்டையிட்டு மரணியுங்கள்'' என்றார் சதாம் ஹுசைன். ''வீடு திரும்புவதற்காகப் போராடுங்கள்'' என்று தனது படைகளைப் பணித்தார் நோர்மன் சுவாஸ்கொவ்.

பலமொழி, இன, மத, பண்

(2ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க அதி சிறந்த
# சண்டை விமானம் எவ் - 15

1980களின் ஆரம்பத்தில் அமெரிக்க வான படையில் F-15 சண்டை விமானம் இணைத்துக் கொள்ளப்பட்டது. இந்த விமானம் இணைத்துக் கொள்ளப் பட்டதும் அமெரிக்க வான் படை நிலையான வலிமையைப் பெற்றது. F-15 இன்று வரை அமெரிக்க வான் பாதுகாப்பிற்கு வலிமையும் பெருமையும் தருகிறது இது வானில் இன்னும் பல வருடங்கள் சிறப்புடன் விளங்க வல்லது.

F-4 ரக விமானம் F-15 ன் முன்னோடியாகும். சோவியத் ரஷ்யத் தயாரிப்பான மிக்-23 மிக்-25 விமானங்கள் அமெரிக்க விமானப் படையைச் சிந்திக்கத் தூண்டின. F-15 ஈகிள் போர் விமானம் தோன்றுவதற்கும், உருவம் பெற்று முழுமை பெறுவதற்கும் தூண்டுகோலாய் அமைந்தவை ரஷ்ய மிக் விமானங்களே. F-15 உருவாகியதும் அது டைனமிக்ஸ் - 111 ரக விமானங்களுக்குப் பதிலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அமெரிக்க விமானப் படைக்குப் பெருமை சேர்த்த F-15 மிக் டொனால் டக்ளஸ், ஹக்ஸ் என்பவர்களால் Advanced Fighter Capability Demonstration என்ற செயற்திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும்.

இத்தகைய சிறப்பாயமைந்த அதி உன்னத அமெரிக்க சண்டை விமானமான F-15ல் பல்பயன்பாடுஉடைய ஹக்ஸ் APG 63 ரக ராடர் பொருத்தப்பட்டுள்ளது. இந்த ராடர் தூரத்தில் தென்படும் பொருள்களை அவதானிக்க உதவுவதோடு, ஆகக் குறைந்தது 50 அடி பதிவில் பறக்கும், இலக்குகளையும் குறி தவறாது தாக்க வல்லது, நூறு மைல்கள் தொலைவில் தென்படும் பொருள்களையும் காட்டக் கூடியது.

APG-63 இணைப்பு அக்கு வானத்திலிருந்து வானத்துக்கும், வானத்திலிருந்து நிலத்திலும் இலக்குகளைத் தாக்க வல்ல ஆற்றலுடையது.

APG 63 வான் வெளியில் விமானத்தை ஓட்டுவதற்கு இலகுவாகப் பயணப்பாதையையும் வரைபடம் கீறி உதவுகிறது. F-15 ஈகிள் விமானத்தில் ALR-56 ராடர் பொருத்தப்பட்டுள்ளது. எதிரியின் ராடர் திரையில் பறந்து செல்லும் F-15 அவதானிக்கப்பட்டால், ALR-56 உடனடியாக அதை F-15 விமான ஓட்டிக்கு உணர்த்தக் கூடியது.

F-15 விமானங்கள் மிகப் பதிவாகப் பறக்கக் கூடியவை. அத்துடன் இரவு நேரத்திலும் இலக்குகளைத் தாக்கக் கூடியதாகவும், அபாயத்தை முன்கூட்டியே உணர்த்தக் கூடிய வகையிலும், வரைபடங்களை உடன் வரைந்து காட்டக் கூடிய முறையிலும் எலக்ரோனிக் கருவிகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக APG-70 ரக ராடரும் பொருத்தப்பட்டுள்ளது.

36,000 அடி உயரத்தின் மேல் F-15 விமானத்தின் ஆகக் கூடிய வேகம் மணித்தியாலம் ஒன்றுக்கு 1,650 மைல்களும், ஆயிரம் அடியில் இதன் ஆகக் கூடிய வேகம் 915 மைல்களுமாகும் இந்த ரக விமானம் 60 000 அடி உயரம் வரை பறக்கக் கூடியது F-15 900 அடிகள் வரை விமானத் தளத்தில் ஓடிப் பறக்கக் கூடிய சக்தி கொண்டவை; கடல் மட்டத்திலிருந்து நிமிடமொன்றுக்கு 50 000 அடி வேகத்தில் உயரக் கூடியது;

F-15 ஈகிள் குடும்பத்தில் ஆறு விமானங்கள் உள்ளன; அவை வருமாறு: F-15A, F-15B, F-15C, F-15D, F-15E, F-15J இத் தொகுப்பு விமானங்களின் தனித்தன்மையை பாரசீக வளைகுடாப் போரில் சண்டையிட்ட ஏனைய விமானங்களுடன் ஒப்பு நோக்கும் போது, இக் குடும்பத்தைச் சேர்ந்த தனிப்பண்புகளும், சிறப்புக் கூறுகளும் நிலைத்து நிற்கின்றன.

F 15விமானங்கள் காட்சிக்கு அழகாக அமைந்திருப்பதுடன் மற்ற மிக் விமானங்களை விட மூன்று அலாதியான குண விசேடங்களைக் கொண்டவை. F-15 விமானங்கள் நீண்ட தூரம் பறக்கக் கூடியவை. அத்துடன் தளத்தில் குறுகிய தூரம் ஓடி, உச்ச வேகத்தில் உயரக் கூடியவை.

| | மிக்- 25 | மிக்- 23 | F- 15 | ரொண்டோ |
|---|---|---|---|---|
| உயரத்தில் ஆகக்கூடிய வேகம்:- | 3.2 | 2.35 | 2.5 | 2.2 |
| எரிபொருள் நிரப்பி ஓடக் கூடிய தூரம் (கி. மீ.):- | 2900 | 2500 | 4600 | 3600 |
| கடல் மட்டத்திலிருந்து மேல் கிளம்பும் வேகம் (அடி / நிமிடம்):- | 40950 | 30000 | 50000 | 30000 |
| பறக்க ஆரம்பிக்கும் போது வேகம் (அடி):- | 4525 | 2950 | 900 | 2500 |
| பறக்கும் ஆகக்கூடிய தூரம்:- | 80000 | 61000 | 60000 | 50000 |

# ஈராக்கிய பல நகரங்கள் கிளர்ச்சிக்காரரிடம் வீழ்ச்சி

## ஈரான் வானொலி இர்னா தெரிவிப்பு

(தெஹ்ரான்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசையினை பதவியிலிருந்து கவிழ்ப்பதற்குப் போராடி வரும் கிளர்ச்சிக்காரரின் கட்டுப்பாட்டில் ஈராக்கிய புனித நகரங்களான கருதுபாவும், நசாப்பும் வந்து விட்டன என்று வளைகுடாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கிய குடியரசுப் பாதுகாப்புப் படை தென்கிழக்கு நகரமான அல் அமராவில் கிளர்ச்சிக்காரருடன் 30தாங்கிகளுடன் சேர்ந்து விட்டதாக ஈரானிய செய்தி ஸ்தாபனமான இர்னா அறிவிக்கிறது.

தெற்கு ஈராக்கில் அரசுக்கு எதிரான சியா முஸ்லிம் அடிப்படை வாதிகளின் கை ஓங்கி வருகிறது. எனினும் நிச்சயமற்ற நிலைமை தொடர்ந்து நீடிக்கிறது. கிளர்ச்சிக்காரர்களான சியா முஸ்லிம்களுக்கு ஈரான் பின்னணியில் உள்ளதாம்:

குருடிஷ் பூர்வீக குடிமக்களும் தீவிரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களுக்குத் துருக்கி இரகசியமாக உதவி வருகிறது.

இதேவேளை, கிளர்ச்சிக்காரர் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் இரு மாகாணங்களுக்கு இரு சிரேஷ்ட அதிகாரிகளைச் சதாம் ஹுசைன் அனுப்பி வைத்துள்ளார்.

தெற்குப் பகுதியில் நான்கு நகரங்கள் முஸ்லிம்அடிப்படை வாதிகள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் ஈரானிய செய்திகள் தெரிவிக்கின்றன. இங்கு சண்டைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

## அமைச்சர் இராஜினாமா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசாங்கத்தின் வளைகுடா குறித்த கொள்கை அமெரிக்க சார்புடையதாக இருக்கிறது என்று கூறி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அப்துல் சதார்க்கான் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானிய பிரதமரிடம் ராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்த அந்த அமைச்சர் அரசாங்கத்தின் வளைகுடா பற்றிய கொள்கையே தாம் ராஜினாமாச் செய்வதற்குக் காரணம் எனக் குறிப்பிட்டார். ஆனால் இவரின் ராஜினாமாக் கடிதம் இதுவரை ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

# அமெரிக்க தலையீட்டை முஸ்லிம் உலகம் மறக்காது

## -யாசிர் அரபாத்

(அம்மான்)

'வளைகுடாப்போரில் அமெரிக்கா தலையிட்டதை முஸ்லிம் உலகம் என்றுமே மறக்காது' என பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அரபாத் இஸ்ரேலைப் பெரிதுபடுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது என்றும், ஈராக்கை ஒழித்து விடுவதே அமெரிக்காவின் முதலாவது திட்டமாகவும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

# தமிழ்நாட்டில் மே மாதத்தில் தேர்தல் நடக்கும்

## - சந்திரசேகர்

(அகமதாபாத்)

''தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் மே மாதத்தில் நடைபெறும் என்று இந்தியப் பிரதம மந்திரி எஸ். சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

அகமதாபாத் விமானநிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சந்திரசேகர் ''நாட்டில் இடைக்காலத்தேர்தல் நடாத்தும் சாத்தியக் கூறுகள் இல்லை'' என்று கூறிய அதேநேரம், தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் மே மாதம் நடைபெறுமென்று தெரிவித்தார்.

இதேநேரம் சென்னையில் தமிழகத் தேர்தல் அதிகாரி செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது ''இந்த மாதம் 20 ஆம் திகதிக்குள் தமிழக சட்டப் பேரவைகளுக்கான தேர்தல் பணி முடிந்துவிடும்'' எனத் தெரிவித்துள்ளார்.

# புலமைப் பரிசில் மாணவர்கள் 10க்குள் விண்ணப்பிக்கலாம்

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான விசேட புலமைப் பரிசில் பரீட்சை மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடாத்தப்பட இருப்பதை முன்னிட்டு கடந்த ஆண்டு ஆகஸ்ட்மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற அதே பரீட்சைக்குத் தோற்றமுடியாதுபோன மாணவர்கள் 1991 மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும் படி பரீட்சைத்திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது

முன்னர் பரீட்சைக்குத் தோற்றமுடியாதுபோய்த் தற்பொழுது அகதிமுகாம்களிலோ புனர்வாழ்வு முகாம்களிலோ தங்கியிருக்கும் மாணவர்களும் இடம்பெயர்ந்து வந்து பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் கல்வி நிலையங்கள் சில தினங்களுக்கு மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களாக யாழ். நகரில் பரவலாக விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதையடுத்து யாழ். நகரிலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் ஒரு சில நாட்களுக்கு மூடப்பட்டுள்ளதாக மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இதேநேரம் நேற்றைய தினம் நகரிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் நேரத்துடன் மூடப்பட்டன. (மு)

## நெல்லியடியிலும் குண்டுவீச்சு

(செ. த மை)

நெல்லியடி - கேணியடிப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1-30 மணியளவில் இரண்டு போர் விமானங்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டன. இந்த தாக்குதலின்போது அருளப்பு மரியதாஸ் ஜெயரத்தினம், இ. ஆனந்தராணி ஆகியோரது வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன; இத்தாக்குதலின்போது கணேஸ் அரியரையமும் பெருமளவு சேதமடைந்துள்ளன. பிலிப்தருமநாயகம் என்பவரின் வீட்டின்மேல் வீசப்பட்ட மற்றொரு குண்டு வெடிக்காத நிலையில் புதையுண்டுள்ளது

## கருத்தரங்கு

(நமது நிருபர்)

உணவுப்பத்தி சம்பந்தமான கருத்தரங் கொன்று இன்று பிற்பகல் 4-00 மணியளவில் கொழும்புத்துறை மணிப்பதியில் நடைபெறவுள்ளது. தமிழீழ ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. திலீபன் அவர்கள் கருத்துரை வழங்குவார்.

## கண்காணிப்பில் ராஜீவ் வீடு..?

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியின் இல்லத்தை இரகசியப் பொலிஸார் வேவுபார்த்த சம்பவம் தொடர்பாக இந்திரா காங்கிரஸ் கட்சி நேற்று மக்கள் அவையில் மூன்று தடவைகள் வெளிநடப்புச் செய்தது:

வெளிநடப்புச் செய்தபோதெல்லாம் மக்கள் அவையில் இருக்கவேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையைவிட குறைவாகவே இருந்தது: இதன் விளைவாக மக்கள் அவை மூன்று முறையும் ஒத்திவைக்கப்பட்டது.

# தொடர்ந்தும் பகிஷ்கரிக்க எதிர்க்கட்சிகள் முடிவு

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளன. கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கைகலப்பைத் தொடர்ந்து எதிர்க் கட்சிகள் பகிஷ்கரிப்பில் இறங்கியது தெரிந்ததே. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் குரலுக்கு அரசு மதிப்பளிப்பதில்லை என்றும், விவாதிக்கப்படும் விஷயங்கள் குறித்து தமக்கு அறிவிக்கப்படுவதில்லை என்றும், அவை கூறியுள்ளன.

இதனிடையில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சபாநாயகர் இருக்கையில் அமர்ந்ததை கண்டிக்கும் தீர்மானம் எதிர்க்கட்சியினர் எவரும் இல்லாமலேயே நேற்று நிறைவேற்றப்பட்டது

## குண்டு வீச்சு ஒருவர் காயம்

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் குண்டுத் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் காயமடைந்தார். சில வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் எஸ் தம்பிராசா (வயது 51) என்பவர் படுகாயமடைந்தார். இப் பகுதியில் இருந்த வீடுகள் சில சேதமடைந்தன. (க) (85)

## வழமைபோல் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவம் இவ் வருடம் வழமைபோல் நடத்துவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

29ஆம் திகதி உத்தர நட்சத்திரத்தில் கோயில் பூசை மாத்திரம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கமத் தொழில், கடற் தொழில், கைத் தொழில் சம்பந்தமான கருத்தரங்கு கடந்த மாதம் 28ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற்றது

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு உற்பத்திக் குழுக்களின் இணைப்புக்குழு ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கிற்கு தமிழீழ ஆய்வு நிறுவன உதவிப் பொறுப்பாளர் திலக் தலைமை தாங்கினர் (21)

## தேர்முட்டி சேதம்

கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நேற்றுப் பிற்பகல் 3-30 மணிக்கு இடம் பெற்ற குண்டுத் தாக்குதலினால் கோவில் முன்பக்கமும், ப. நோ. கூ. ச. நல்லூர்கிளை, பேக்கரி, தம்பிப்பிள்ளை கந்தையா வீடு ஆகியன பலத்த சேதமடைந்தது கோயில் தேர்முட்டியும் சேதமானது; (செ. த. மை)

## குடியிருப்பு

பகுதியில் இருந்த இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

வண்டி இழுக்கும் இரண்டு மாடுகளும் ஸ்தலத்தில் கொல்லப்பட்டன. (21)(மு)(க.(44) (செ த. மை)

## வடக்கு-கிழக்கில்

ராதபுரம் ஆகிய இடங்களிலும் வடகிழக்கில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ்பேசும் மாணவர்களது வசதி கருதி ஒரு சில பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமே தவிர இப்பரீட்சை நிலையங்களில் மட்டும் பரீட்சைகள் நடைபெறமாட்டா.

கடந்த வருடம் மேற்படி பரீட்சையில் தோற்றத் தவறிய சகல மாணவர்களதும், வசதி கருதியே இந்த விசேட பரீட்சை வடக்குக் கிழக்கில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட பரீட்சைக்கு தோற்றுவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு தங்கள் விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்கள ஆணையாளருக்கோ அல்லது அவர்கள் பகுதி மாவட்ட கல்விப் பணிப்பாளர்களிடமோ அனுப்பி வைக்கும்படி பரீட்சைத் திணைக்களம் கேட்டுள்ளது

## அச்சுவேலியில் ஒருவர் காயம்

அச்சுவேலி - தம்பாலையில் நேற்றுக்காலை 9 மணியளவில் இரு போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் சுப்பிரமணியம் தம்பிராசா (55) என்பவர் காயமடைந்தார். மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன. இப்பகுதியில் மூன்றுகுண்டுகள்வீசப்பட்டன

அதேசமயம் குண்டுவீச்சுச் சம்பவ நேரம் சைக்கிளில் வேடிக்கை பார்க்கச்சென்ற இருஇளைஞர்கள் 'முன்போக்' உடைந்துமுகம்குப்புறவிழுந்து காயமடைந்தனராம்.

(செ த. மை)

## ஊர்காவற்றுறையில

10.30 மணியளவில் இச் சண்டை ஆரம்பமானது. விடுதலைப் புலிகள் தரப்பில் எது வித சேதமும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மாலை 2 மணி மணியளவில் இராணுவம் சின்னமூளாயைநோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டதில் மூன்று வீடுகள் சேதமாயின

## கலட்டிச் சந்தியில

எம் விஜயரட்ணம் (வயது46) ஆகிய இருவரும் பலத்த காயம் அடைந்தனர். இதேஇடத்தில் மீண்டும் நான்கு மணியளவில் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டதில் இல வர்த்தக நிலையங்களும், ஐந்து குடியிருப்புக்களும் பலத்த சேதமடைந்தன. (செ. த மை ) (க) (85)

# மக்கள் ஆதரவு புலிகளுக்கு என்பதை ஏற்கத்தான் வேண்டும்

## -முஸ்குந்த் துபே

(டில்லி)

தமிழீழ மக்களின் பெரும்பான்மை ஆதரவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே இருக்கிறது என்பதை இந்தியாவும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டியுள்ளது என இந்திய வெளியுறவுச் செயலாளர் மூஷ்குந்த் துபே புதுடில்லியில் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் இலங்கைத் தமிழர் விவகாரம் அரசியல்ரீதியான வழிமுறைகளாலேயே தீர்வு காணப்படல் வேண்டும் என்றும் கூறியுள்ளார் என வெரித்தாஸ் வானொலி கூறியது இவர் முன்னாள் வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லாவுடன் கொழும்பு சென்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிறுத்திவைக்கப்பட்டிருந்தகாரில் இருந்தே குண்டு வெடித்தது

ஹவ்லொக் வீதிக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வீதியருகில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில் குண்டு பொருத்தப்பட்டு பின்னர் தன்னியக்க கட்டுப்பாடு அல்லது வேறு வழியில் இயக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸ் குண்டு வெடிப்பு நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர்,

இது தொடர்பான புலனாய்வுகள் யாவும் இரகசிய பொலிஸ் திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டிருக்கிறது

## மானிப்பாய் வங்கி நிவாரணம்

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் எதிர்வரும் சனிக்கிழமை 9ஆம் திகதி ரூ 4000/- நிவாரண கொடுப்பனவு கொடுக்கப்பட உள்ளதாக இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவு ஜே 68, ஜே 64, ஜே 69, ஜே 67, ஜே 71, ஜே 65, ஜே 72, ஜே 61 ஆகிய கிராம சேவகர் இலக்க கிராமசேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## ஜே. வி. பி. தப்பி ஓட்டம்

(கொழும்பு)

பூஸா தடுப்பு முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் ஜே.வி.பி யைச் சேர்ந்த இருவர் தப்பியோடியதாக சிறை அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் முப்படைத் தலைமையகம் தெரிவித்தது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மங்கந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.